பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
17 09 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

1. மழைநீர் சேகரிப்பை மக்கள் இயக்கமாக முன்னெடுக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு கடந்த 100 நாட்களில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, தெரிவித்துள்ளார்.
3. தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இன்று தமது பதவியை ராஜிநாமா செய்ததை அடுத்து, புதிய முதலமைச்சராக திருமதி அதிஷி மர்லினா பதவியேற்கவுள்ளார்.
4. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது
5. ஆசிய சாம்பியன் ஹாக்கிக் கோப்பையை இந்தியா ஐந்தாவது முறையாக வென்று சாதனை படைத்துள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

மழைநீர் சேகரிப்பை மக்கள் இயக்கமாக முன்னெடுக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று எட்டாவது இந்திய தண்ணீர் வாரத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், இலக்குகளை எட்டுவதற்கு நீர் மேலாண்மை மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மழைநீர் சேகரிப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கான இலக்குகளை எட்டுவதற்கு ஒன்றிணைந்த முயற்சி தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

பன்னெடுங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் நீர் மேலாண்மை திட்டங்கள் இன்றும் ஏற்புடையவை என்றும், தற்போதைய தேவைக்கு ஏற்ப இத்திட்டங்களை நவீனமயமாக்க வேண்டுமென்றும் அவர். கூறினார்.

நாட்டின் சுதந்திர நூற்றாண்டுக்குள் எட்ட வேண்டிய இலக்குகளில் நீர் மேலாண்மைக்கான திட்டங்களும் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜல்ஜீவன் இயக்கம், நீர்மேலாண்மை இலக்குகளை எட்டுவதற்கு உதவிகரமாக இருப்பதாகவும், நாடு முழுவதும் சமமான நீர் பகிர்வை உறுதி செய்திருப்பதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

அனைவருக்கும் தூய்மையான குடிநீர் என்ற இலக்கை எட்டுவதற்கும், 78 சதவீத கிராமப்புறங்களில் குடிநீர் வசதியை உறுதி செய்திருப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல், நாட்டின் நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான இலக்குகளை எட்டுவதற்கு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கிராமப்புறங்களில் உள்ள 15 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு இதுவரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் நாடு முழுவதிலுமிருந்து நாலாயிரம் பேர் கலந்து கொண்டுள்ளனர்.

40-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 200-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடியின் 74-வது பிறந்த நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சர்கள், தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் ஆளுநர்கள், தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மற்றும் பல்வேறு மாநில முதலமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர் திரு நரேந்திரமோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

திரு நரேந்திரமோடியின் பிறந்த நாளையொட்டி புதுதில்லியில் உள்ள பிஜேபி-யின் தலைமையகத்தில், அவரது வாழ்க்கையை விளக்கும் கண்காட்சியையும் அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா திறந்து வைத்தார்.

கட்சியின் சேவை இயக்கத்தின் கீழ ரத்த தான முகாமையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு நட்டா, ஏழை எளிய மக்கள், நலிவுற்றோர், ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குடியினர், விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரசு பாடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

திரு நரேந்திரமோடியின் பிறந்த நாளையொட்டி பிஜேபி சார்பில் நாடு முழுவதும் ரத்த தான முகாம் உள்ளிட்ட சேவை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பதவியேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் தாங்கள் மேற்கொண்ட திட்டங்களை பட்டியலிட்டு வருகின்றன.

பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப்சிங் பூரி, தமது துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்தார்.

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் ஏராளமான ஏழை மக்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மத்திய மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன், தமது அமைச்சகத்தின் சாதனைகளை பட்டியலிட்டார்.

பால் உற்பத்தியில் இந்தியா உலகிற்கே முன்னோடியாக திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

மீன்வளத் துறையை மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை திரு ராஜீவ் ரஞ்ஜன் எடுத்துரைத்தார்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, கடந்த 100 நாட்களில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒன்பது முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதாகத் தெரிவித்த அவர், இதனால் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று கூறினார்.

நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் புதிய வேலைவாய்ப்புகளுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதையும் திரு மன்சுக் மாண்டவியா சுட்டிக்காட்டினார்.

**[]<<<>>>[]**

சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறைப்பணிகளை மேற்கொள்ளும்போது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மாசு ஏற்படுவதை தடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் காஸியாபாத்தில் இன்று தூய்மையே சேவை இயக்கத் திட்டத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், தானியங்கி வாகன உற்பத்தி நிறுவனங்கள் செறிவூட்டப்பட்ட இயற்கை எரிவாயு, பசுமை ஹைட்ரஜன் மற்றும் உயிரி எத்தனால் போன்ற எரிபொருட்களால் இயங்கும் வாகனங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் மரக்கன்றுகளையும் அமைச்சர் திரு நிதின்கட்கரி நட்டு வைத்தார்.

**[]<<<>>>[]**

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இன்று தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

தில்லி துணைநிலை ஆளுநர் திரு வி கே சக்ஷேனாவை சந்தித்து தமது ராஜிநாமா கடிதத்தை அவர் அளித்தார்.

தில்லி ஆம் ஆத்மி சட்டமன்ற கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி அதிஷி மர்லினா-வும் ஆட்சி அமைக்க உரிமைகோரி கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

முன்னதாக இன்று காலை நடைபெற்ற ஆம் ஆத்மி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் தில்லியின் புதிய முதலமைச்சராக திருமதி அதிஷி மர்லினா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**Anantnag, Pulwama, Shopian, Kulgam, Doda, Ramban, Kistwar** ஆகிய ஏழு மாவட்டங்களில் இடம்பெற்றுள்ள 24 சட்டப்பேரவை தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்குப்பதிவையொட்டி அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் காவல்துறையினருடன் துணை ராணுவப்படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சவாடிகளில் கூடுதல் வெப் கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

**[]<<<>>>[]**

பாரிஸ் பருவநிலை மாற்றத்திற்கான உச்சிமாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை முனைப்புடன் செயல்படுத்தும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், மறுசுழற்சி முறையை ஊக்கப்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையை கொண்டு வருவதற்கான முயற்சியை மத்திய அரசு எடுத்து வருவதாகக் கூறினார்.

நீண்டகாலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாகவும் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நபிகள் நாயகத்தின் பிறந்த தினமான மீலாதுன் நபி இன்று கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகைகளில் ஈடுபட்டதுடன் ஒருவருக்கொருவர் மிலாதுன்நபி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையின் மண்டல மையத்தை சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு இன்று திறந்து வைத்தார்.

தென்தமிழகம் மற்றும் அதனையொட்டியுள்ள கேரள மாநிலத்தின் பேரிடர் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த மண்டல தேசிய பேரிடர் மையம் செயல்படவுள்ளது.

எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் 30-க்கும் மேற்பட்ட வீரர்கள் இந்த மையத்தில் தயார் நிலையில் இருப்பதாக தேசிய பேரிடர் மீட்புப்படையின் கமாணடர் ஸ்ரீதர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ஸ்ரீதர் ) ---43 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஆசிய சாம்பியன் ஹாக்கிக் கோப்பையை இந்தியா ஐந்தாவது முறையாக வென்று சாதனை படைத்துள்ளது.

சீனாவின் **Hulunbuir** -யில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இறுதி ஆட்டத்தில் இந்தியா ஒன்று – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

**Jugraj singh** இந்த கோலை அடித்து இந்தியாவின் வெற்றிக்கு வழிகோலினார்.

***End of News***